**5. தாவீதை நன்றாக அறிந்திருந்த சவுல் அவன் யார் என்று கேட்பது ஏன்?**

1சாமுவேல் 16:14-23ல், தாவீது யார் என்பதை சவுல் அறிந்தவனாக இருக்கின்றான். ஆனால், அடுத்த அதிகாரத்தில், அதாவது 1சாமுவேல் 17:55:58ல் தாவீது யார் என்பதைப்பற்றி அறியாதவனாக சவுல் மறுபடியும் அவனைப்பற்றி விசாரிப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கான காரணம் யாது? **(ஜெயன் ஜெயகுமார், லண்டன்).**

1சாமுவேல் 16ம் அதிகாரத்தின்படி "தாவீது பெத்லகேமைச் சேர்ந்த ஈசாயின் குமாரன், சுரமண்டலம் வாசிப்பதில் தேறினவன், பராக்கிரமசாலி, யுத்தவீரன், காரியசமர்த்தன், சவுந்தரியமுள்ளவன்" என்று சவுலிடம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளான் (16:18). அதன் பின்னர் தாவீது சவுலின் ஆயுததாரியாகவும், சுரமண்டலம் வாசிக்கிறவனாகவும் இருந்தான் (16:21-23). இதனால் 17ம் அதிகாரத்தில் தாவீதைப்பற்றி அறியாதவனாக அவனைப்பற்றி சவுல் விசாரிக்கவில்லை. எனினும், எப்பொழுதெல்லாம் சுரமண்டலம் வாசிப்பதற்குத் தாவீது தேவைப்பட்டானோ அச்சந்தர்ப்பங்களிலேயே அவன் சவுலுக்கு முன்பாக வருபவனாக இருந்தான். அச்சமயங்களில் சவுல் பொல்லாத ஆவியினால் பாதிக்கப்பட்டவனாக இருந்ததினால், தாவீதையும் அவனுடைய குடும்பத்தையும்பற்றிய விபரங்களை அறியாதவனாகவே இருந்தான். இதனால், தாவீது கோலியாத்தை மேற்கொண்ட பின்னர் அவனுடைய குடும்ப விபரங்களை அறிந்து கொள்வதற்காக "அவன் யாருடைய மகன்?" என்று சவுல் விசாரித்தான் (1சாமு.17:55-58).

தாவீது ஒரு சிறந்த யுத்த வீரனாக இருந்ததினால், அவனுடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்களும் அவனைப்போல வல்லவர்களாக இருப்பார்கள் என்னும் எண்ணத்துடன், அவனுடைய தகப்பனை அல்லது சகோதரர்களைத் தன்னுடைய தனிப்பட்ட பாதுகாவலர்களாக வைத்துக்கொள்ளலாம் என்னும் நோக்கத்துடன் அவனுடைய தகப்பனைப்பற்றி விசாரித்துள்ளான். சவுலின் இத்தகைய திட்டத்தைப்பற்றி 1சாமுவேல் 14:52ல் குறிப்பிடப்பட்டுள்ளது.

1சாமுவேல் 16ம் அதிகாரத்தில் தாவீதைத் தன்னுடைய வேலைக்காரரில் ஒருவனாக மட்டுமே அறிந்திருந்த சவுல், 17ம் அதிகாரத்தில் அவனுடைய குடும்ப விபரங்களை அறிந்து கொள்வதற்காக அவனைப்பற்றி விசாரித்தான். எனவே, இவ்விரு அதிகாரங்களுக்கும் இடையில் எவ்வித முரண்பாடுகளும் இல்லை.

© M.S.Vasanthakumar, Tamil Bible Research Centre, London, November, 2006